Federation of Tamil Sangams of North America
SINCE 1988

கோடைமலர்

# அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2050 / புரட்டாசி / **SEP - 2019**








## 31 தமிழ்ச்சங்கங்களின் சுவையான செய்திக் கட்டுரைகள்

## உலகத் தமிழ் தொழில்முனைவோர் கூட்டமைப்பு விழா - 2019

## நியூ யார்க் ஸ்டோனி புரூக் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை



## உங்களுக்குத் தெரியுமா? வினாக்கள்...

# பேரவைத் தலைவரிடமிருந்து...



பேரவைப் பேராளர்களுக்கும், கொடையாளர்களுக்கும் மற்றும் முப்பெரும் விழா தன்னார்வத் தொண்டர்களுக்கும் வணக்கம்.

உங்களை அருவியின் கோடை இதழ் வாயிலாகச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். சிகாகோவில் பேரவையின் 32 ஆம் ஆண்டு தமிழ் விழாவும், பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடும், சிகாகோ தமிழ்ச்சங்கத்தின் பொன்விழாவும், உங்கள் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடந்து முடிந்தன. 5,500-க்கும் மேலான தமிழ் மக்கள் முப்பெரும் விழாவில் கலந்து கொண்டார்கள் என்பது சிறப்பு. உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தமிழக அரசின் சார்பாக, தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. மாஃபா. கே. பாண்டியராஜன் அவர்கள் ஒரு குழுவுடன் மாநாட்டுக்கு வந்து சிறப்பித்தார். மொரிசீயஸ் நாட்டின் அதிபர் மாண்புமிகு பரமசிவம் வையாபுரி, மற்றும் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் முன்னாள் ஆணையர் முனைவர் நவநீதம் பிள்ளை அவர்களும் மாநாடு தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தார்கள்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை வாழ்த்தி இந்தியத் தலைமை அமைச்சர் மாண்புமிகு நரேந்திர மோதி அவர்கள், “இந்தியா பல்வேறு மொழிகளைத் தன்னகத்தே கொண்ட சிறப்புக்குரியது. ஒவ்வொரு மொழியும் தனித்துவமும் பெருமையும் வாய்ந்தது. பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைக்கும் விசையாக இம்மொழிகளே திகழ்கின்றன…. இந்த உலகத் தமிழ் மாநாடு பெருவெற்றி பெறட்டும்! தமிழ்மொழி புதிய உச்சங்களைத் தொட அது உதவட்டும்!” என்று வாழ்த்துரை அனுப்பியது நமக்குப் பெருமை. மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களும் வாழ்த்துச் செய்தி அனுப்பித் தந்தது மகிழ்ச்சி. தேர்ந்தெடுக்கப்பட்ட எழுபத்து மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகள், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தமிழ் அறிஞர்களின் முன்னிலையில் வாசிக்கப்பட்டன.

2020 பேரவைத் தமிழ்விழாவை அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம் எடுத்து நடத்த இசைந்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) கையெழுத்தானவுடன், முறையாக 2020 பேரவைத் தமிழ்விழா குறித்து அறிவிப்பு வெளியிடப்படும். பேரவை உறுப்பினர் சங்கங்களின் எண்ணிக்கை ஐம்பத்து ஐந்தை தாண்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரித்துக் கொள்கிறேன்.

2020 பேரவைத் தமிழ்விழாவில், நீங்கள் உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் வந்து கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.. பேரவை வளர்ச்சிக்கான உங்கள் திட்டங்களையும், கருத்துகளையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுகிறோம். 2019 முப்பெரும் விழா வெற்றியடைய பெரும் பொறுப்பேற்று நடத்திக் கொடுத்த விழா ஒருங்கிணைப்பாளர் திரு. வீரா வேணுகோபால் அவர்களுக்கும், இராப்பகலாக உழைத்த தன்னார்வத் தொண்டர்களுக்கும் நன்றிகள் பல உரித்தாகுக.

அன்புடன்

**சுந்தர் குப்புசாமி, தலைவர்**

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

## வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை செயற்குழு

தலைவர்
திரு. சுந்தர் குப்புசாமி



செயலர்
திரு.சுந்தரபாண்டியன் சபாபதி

துணைத் தலைவர்
திரு. கால்டுவெல் வேள்நம்பி

இணைச் செயலர்
திரு. சச்சிதானந்தன் வெங்கடகிருஷ்ணன்

பொருளாளர்
திரு. விஜயகுமார் தேவராஜ்

## வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை இயக்குனர் குழு

திருமதி. விஜி அழகர்



திரு. நம்பிராஜன் வைத்திலிங்கம்

திரு. இளங்கோவன் தங்கவேலு

திரு. சிவா வேலுபிள்ளை

# ஆசிரியர் கடிதம்



அருவி வாசகர்களுக்கு அன்பான வணக்கங்கள். நமது தமிழ்ச்சங்கங்களில் இவ்வாண்டு கோடையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பினை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஆசிரியர் குழு பெருமகிழ்ச்சியடைகிறது.

பூங்காக்களில் நடைபெற்ற கோடை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், பேரவையின் முப்பெரும் விழா, சிறப்பு விருந்தினர்களுடன் சந்திப்பு, தமிழகக் கலை விழாக்கள், பயிலரங்கங்கள், விடுதலை நாள் விழாக்கள், சமூகநலப் பணிகள், முத்தமிழ் விழாக்கள், வானொலி வாயிலான கலந்துரையாடல், கல்லூரி சேர்க்கைக்கான கலந்துரையாடல்கள், கனடியத் தமிழர் தெருவிழா போன்ற பல இனிய நிகழ்வுகளின் நறுமணம் வீசும் மலராக இக்கோடை இதழ் உருவெடுத்துள்ளது.

பேரவைத் தலைவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, சிகாகோ முப்பெரும் விழா சிறப்புற நடைபெற உதவிய தன்னார்வலர்களுக்கு அருவியின் நன்றிகள் மற்றும் 2020 அட்லாண்டா பேரவை விழா வெற்றியடைய உழைத்து வரும் அன்புள்ளங்களுக்கு வாழ்த்துக்கள்.

இந்தக் கோடை மலருக்குக் கட்டுரைகளைக் காலத்தே அனுப்பி உதவிய சங்கத் தலைவர்களுக்கும், செயற்குழுவினருக்கும் மனமார்ந்த நன்றிகள்

அடுத்துவரும் இலையுதிர் மலரில் மீண்டும் சந்திப்போம்..

குறிப்பு: 2019 பேரவை விழா மலரில் விடுபட்ட விளம்பரங்களும், நன்கொடையாளர்கள் விவரங்களும் இந்த இதழில் சேர்க்கப்பட்டுள்ளன.

அன்புடன் **இளங்கோவன் தங்கவேலு**

அருவி ஆசிரியர், செயின்ட் லூயிஸ், மிசௌரி.




## உள்ளே...


| | |
|---|---|
| முப்பெரும் விழா | - 04 |
| சங்கங்களின் நிகழ்வுகள் | - 05 |
| தொழில் முனைவோர் மாநாடு | - 16 |
| தமிழிருக்கை | - 18 |
| உங்களுக்குத் தெரியுமா? விடை | - 19 |










# 2019 சிகாகோ முப்பெரும் விழா

அனைவரும் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 10-ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 32 ஆம் தமிழ் விழா, சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா என முப்பெரும் விழா சூலைத் திங்கள் 4 ஆம் நாள் முதல் 7 ஆம் நாள் வரை சிறப்புடன் நடந்தேறியது.

சிறப்பு மிகு கலை நிகழ்ச்சிகளாக ஒயிலாட்டம், கரகாட்டம், பரத நாட்டியம், திரைப்படப் பாடல்களுக்கான நடனம் என வண்ணமிகு நாட்டிய நிகழ்ச்சிகள், நாதசுரம், வீணை, தவில் போன்ற தமிழ் இசைக்கருவிகளின் இன்னிசை, தமிழிசை பறை போன்ற உணர்ச்சிமிகு இசை நிகழ்ச்சிகள், இலக்கியச் சொற்பொழிவுகள், தமிழ் உணர்வுகளைத் தட்டி எழுப்பும் கருத்துரைகள், விழிப்புணர்வு நாடகங்கள், தமிழ்ப் பள்ளி மாணவர்களின் திறமைகளையும் தமிழ் மீதான பற்றையும் வெளிக்கொணர்ந்த குறள் தேனீ, குறள் தூதர், தமிழ்த் தேனீ மற்றும் கலை நிகழ்ச்சிகள், தமிழரின், தமிழின் தொன்மையைப் பறை சாற்றும் கீழடி மற்றும் தமிழர் பற்றிய பேருரைகள், தமிழிசைப் பாடல்கள், சிறுவர்களுக்கான ஓவியப் பட்டறை, இலக்கிய வினாடி வினா, பட்டிமன்றம், சங்க இலக்கியப் பாடல்களின் சேர்ந்திசை, மக்களிசை, இன்னிசை, திரைப்பட நடிகர் நடிகையரின் ஆடல் பாடல்களுடன் நட்சத்திர இரவு என, கண்ணுக்கும், மனதுக்கும், அறிவுக்குமான விருந்துகளாக ஏராளமான நிகழ்ச்சிகள் அனைவரின் பாராட்டுதல்களுடன் மூன்று நாட்களாகச் சிறப்பாக நடந்தேறின.

50 ஆண்டுகாலமாகச் சிகாகோ பெருநகரில் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பணியாற்றிய முன்னாள் தலைவர்களைக் கௌரவித்தும், தடம்

**உங்களுக்குத் தெரியுமா?**

1. கொளைவல், பாணன், பாடினி, கூத்தர், இளையர், கண்டோர், இருவகைப் பாங்கர், பாகன் பாங்கி, செவிலி, அறிவர்.... போன்றோரை, 'நம்பி அகப்பொருள் நூற்பா' எவ்வகையினராகக் குறிக்கிறது?

அ) தோழன் தோழி உறவுகள் ஆ) குடும்ப அங்கத்தினர் இ) ஊடல் தீர்க்கும் வாயில்கள் ஈ) பொது மக்கள்





பதித்தவர்களுக்கு விருதுகள் வழங்கியும், பொன்பறை நிகழ்ச்சிகள் நடத்தியும் சிகாகோ தமிழ்ச்சங்கம் தன் பொன்விழாவைக் கொண்டாடியது.

கடைசி இரண்டு நாட்களில் உலகத் தமிழ் தொழில் முனைவோரின் சிறப்பு மாநாடு மற்றும் தமிழின் தொன்மையையும், வளமையையும், பெருமையையும் வெளிப்படுத்தும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் உலகமெங்குமிருந்தும் வந்திருந்த 100க்கும் மேற்பட்ட அறிஞர்களால் உரை நிகழ்த்தப்பட்டும், கலந்துரையாடியும் செவ்வனே நடந்தேறியது.

நான்கு நாட்களாக நடைபெற்ற இம் மாபெரும் விழாவில், 5000-க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவர்களுக்குச் சுவை மிகு உணவும் பரிமாறப்பட்டது.

அனைத்து மக்களின் உள்ளங்களுக்கும், உணர்வுகளுக்கும், சிந்தனைக்கும் விருந்தாக இருந்த இத்தகைய எழுச்சிமிகு, வண்ணமிகு சிறப்புமிகு நிகழ்ச்சிகள் வெற்றி பெற தன்னார்வத் தொண்டர்கள் அனைவரின் அளப்பரிய, அயராத உழைப்பே காரணமாகும். "கைமாறு கருதா வான் மழை போல்" அயராது உழைத்த தன்னார்வத் தொண்டர்கள், வழிகாட்டிய மற்றும் வழிநடத்திய பெருந்தகைகள் அனைவருக்கும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் விழாக் குழு பெருமைகொள்கிறது.

நிகழ்வுகளைத் தொய்வில்லாமல் உற்சாகத்துடன் கொண்டு செல்ல, பெருமளவில் கலந்துகொண்டு பேராதரவு நல்கிய பெருமக்கள் அனைவருக்கும் நன்றிகள் கூறி விழா குழு அகமகிழ்கிறது.

**முப்பெரும் விழாக் குழு, சிகாகோ தமிழ்ச்சங்கம்**



## பனை நிலம் தமிழ்ச்சங்கம்

**சார்லெஸ்டன் மாநகரில், பனை நிலம் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக கோடை விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். அனைவருக்கும் விளையாட்டுப் போட்டிகள், விநாடி வினா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.**



2. நாட்டுப்புற மருத்துவத்தை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

அ) மந்திரசமய, இயற்கை மருத்துவம். ஆ) சித்த, ஆயுர்வேத மருத்துவம் இ) இயற்கை, சித்த மருத்துவம்

ஈ) மந்திரசமய, சித்த மருத்துவம்

## சிகாகோ தமிழ்ச்சங்கம்

சிகாகோ தமிழ்ச்சங்கம், நேப்பர்வில்லில் நடைபெற்ற இந்திய விடுதலை நாள் கொண்டாட்ட அணிவகுப்பில், பங்கேற்று, அங்கு குழுமியிருந்த 25000-க்கும் மேற்பட்ட மக்கள் முன் "பறை" நிகழ்ச்சி நடத்தி, சிறப்பாகச் செய்தமைக்காக இரண்டாம் பரிசைப் பெற்றது. கடந்த செப்டம்பர் 15, 2019 ஆம் நாளன்று, சிகாகோ தமிழ்ச்சங்கத்தின் "சமூகப்பணி நாள்" - லிபர்ட்டிவில், சாம்பர்க்கு மற்றும் அரோரா பகுதிகளில் நடைபெற்றது. தன்னார்வத் தொண்டர்கள், மற்றும் நம் இளையோர், வறிய இளையோர்க்குத் தேவையான சத்துணவுப் பொட்டலத்தினைத் தயாரிக்கும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.




## மிசௌரி தமிழ்ச்சங்கம்






மிசௌரி தமிழ்ச்சங்கத்தின் கோடைக் கொண்டாட்டம், ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாளன்று லாரல் பூங்காவில் இனிதே கொண்டாடப்பட்டது. இயற்கைச் சூழலில், தமிழ்ச்சங்க இளையோர் குழுவினர் (TSYVO) நடத்திய விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் சுவையான உணவு என நிகழ்ச்சி களைகட்டியது. மிசௌரி தமிழ்ச்சங்கம் தனது வெள்ளி விழா நிகழ்வுகளுக்கெனத் திரட்டப்பட்ட நிதியில் 25 சதவிகிதத்தை, ஜூலை 14 ஆம் நாளில், சோலைவனம் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன், கஜா புயலால் பாதிக்கப்பட்ட திருவாரூர் மாவட்டம், எடமேலையூர் கிராமத்தில் உள்ள 700 குடும்பங்களுக்கு தலா 5 மரக்கன்றுகள் வீதம் வழங்கியது.

## கென்டக்கி தமிழ்ச்சங்கம்

இந்த ஆண்டின் கோடை கால நிகழ்வுகளாக, கென்டக்கி தமிழ்ச்சங்கத்தில் இரு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 5 ஆம் ஆண்டு கிரிக்கெட் தொடரில் இந்த ஆண்டு லூயிவில் மற்றும் அண்டை மாகாணங்களிருந்து 16 அணிகள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற அணிக்குக் கோப்பையும், பரிசும் வழங்கப்பட்டன. இந்த ஆண்டிற்கான கோடைச் சிற்றுலாவில் ஏறத்தாழ 250 பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் உற்சாகத்துடன் பங்கு பெற்றதோடு, "நடப்போம் நல்வாழ்வு பெறுவோம்" என்பதற்கேற்ப, அனைவரும் பூங்காவைச் சுற்றி நடைபயணம் மேற்கொண்டனர். சுவையான இரவு உணவோடு இனிமையாக முடிவடைந்தது கோடைச் சுற்றுலா.






3. பலரது அறிவையும் ஒருவரது நுண்ணுணர்வையும் அதிலிருந்து பெறுகின்றன. அறிவின் சுருக்கம் எதுவாக வடிவெடுக்கிறது?

அ) நீதி நூல் ஆ) வாய்மை இ) பழமொழி ஈ) உவமை

# நியூ யார்க் தமிழ்ச்சங்கம்

நியூ யார்க் தமிழ்ச்சங்கத்தில் கோடை விழா ஜூன் 22, 2019 அன்று பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது. பாடல்கள், நடனம், இசை, உடல் நலம் குறித்த உரை, நகைச்சுவை நாடகம், இவற்றோடு முதல் பகுதி நிறைவுற, மாலையில் இனிய திரை இசைப் பாடல்களுடன் மெல்லிசை நிகழ்த்தினார்கள் சுரேஷ் மற்றும் ஹரிணி. நியூ யார்க் தமிழகக் கல்விக் கழகத்துடன் இணைந்து நடத்திய 'பேரவை சிறப்பு விருந்தினர் சந்திப்பு ஜூலை 21–ஆம் நாள் நிகழ்ந்தது. முனைவர் பாலசந்திரன் இ.ஆ.ப., எழுத்தாளர் திரு. ஆழி செந்தில்நாதன், நடிகர் திரு. ஆரி எனப் பன்முக சிறப்பு விருந்தினர்களுடன், நம் தாயகமாம் தமிழகத்திற்கு, நாம் இங்கிருந்து ஆற்றவேண்டிய கடமைகள் குறித்து மிக்க மன நிறைவோடு உரையாடினோம்.







# நியூயார்க் ஆல்பனி தமிழ்ச்சங்கம்

ஆல்பனி தமிழ்ச்சங்கம் ஜூலை மாதம் 28 ஆம் நாளில், எல்ம் பூங்காவில் நடத்திய மகிழ்வுலாவிற்கு 245–க்கும் மேற்பட்டோர் வருகை தந்தனர். பல்வேறு வகையான உணவுடன், தேநீர், சுண்டல், நீர் மோரும் வழங்கப்பட்டன. திரைப்பட நடிகரும் சமூக செயற்பாட்டாளருமான திரு.ஆரி அவர்கள் 2 மணிநேரத்திற்கு ஒரு விளையாட்டு நிகழ்ச்சியினை நடத்தினார். பல்வேறு வயதினர் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மேலும், அவர் தன்னுடைய குறும் படம் ஒன்றைத் திரையிட்டார். இறுதியாக, அந்த மாலைப் பொழுதின் மயக்கத்தில் இருந்த அனைவரையும், பழைய பாடல்கள் மற்றும் புதிய பாடல்களை உள்ளூர்ப் பாடகர்கள் பாடி மகிழ்வித்தனர்.

# அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம்

மனம் நிறையத் தித்திக்கும் தருணங்களை முத்தமிழ் விழா, அட்லாண்டா வாழ் தமிழர்களுக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறது. ஐயா முனைவர் தி.அமிர்தகணேசன், ஐயா சுந்தரேசன் சம்பந்தம், சொல்லின் செல்வி உமையாள் முத்து அம்மா, ஓய்வு பெற்ற பேராசிரியர் சேது பாண்டியன், முனைவர் வேதையன் என்று அரங்கமே தமிழ்க் கடலில் ஆரவாரமாக முங்கி எழுந்தது. முத்தமிழ் விழாவில் முத்தாய்ப்பாக உள்ளூர் தமிழ் இயக்குனர் செல்வாவின் கண்ணகி நாடகம், பட்டையைக் கிளப்பிய பறையிசை, மனதை வருடிய ராதை மனதில் நாட்டியம், பவித்ரா மற்றும் சோபியா குழுவினரின் பரத நாட்டியம் என அனைத்து நிகழ்ச்சிகளும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன என்றால் அது மிகையல்ல. முத்தமிழ் விழாவுடன் தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் சிறப்பாக நடந்தேறியது.



4. சின்னஞ் சிறு பள்ளியில் – உனக்கொரு; சிங்காரப் பெஞ்சுமிட்டுத்; தின்னக் கனியளித்துப் – பாலபாடம்; செப்புவன் வா கிளியே – இந்தப் பாடலின் ஆசிரியர்..

அ) அழ வள்ளியப்பா ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) கவிமணி



## அர்கன்சாஸ் தமிழ்ச்சங்கம்

அர்கன்சாஸ் தமிழ்ச்சங்க வருடாந்திர சமூகக் கூடுகை மற்றும் விளையாட்டு விழா ஆகஸ்ட் 24, 2019 அன்று லிட்டில்ராக் நகர் மாமல் பூங்காவில் நடைபெற்றன. அதில் சங்க உறுப்பினர்கள் மற்றும் விருந்தினர்கள் கலந்து கொண்டனர். சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கு ஓட்டப் பந்தயம், சாக்கு ஓட்டம், பந்து எறிதல், இசை நாற்காலி ஓட்டம், குதிரை லாடம் எறிதல் மற்றும் கில்லி விளையாட்டுகள் நடத்தப்பட்டன. நிறைவில் பரிசளிப்பு நடைபெற்றது. தலைவர் முனைவர் மகிழ் இராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பரிசுகளை விருந்தினர்கள் திரு. ஹக்கீக் அஹ்மத் மற்றும் திருமதி.ரத்தினமணி வழங்கினர். செயலாளர் மீனாட்சி சுந்தரம் நன்றியுரை கூறினார்.

## சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம்





சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கத்தில் ஜூன் மாதம், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பல்வகை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. மேலும் இந்தியாவின் பல மாநிலத்தவர்கள் பங்கு கொண்ட கிரிக்கெட் போட்டிகளின் இறுதிப் போட்டியில் SATS அணி வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றியது. ஆகஸ்ட் 10 ஆம் தேதி வாழை இலை விருந்துடன் சுற்றுலா இனிதே நடந்தது. அன்று அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றோருக்கு பரிசுக்கோப்பைகள் வழங்கப்பட்டன. ஆகஸ்ட் 15 ஆம் தேதி தமிழ்ச்சங்கத்தின் இரண்டாம் ஆண்டு வெளியீடான ‘மல்லிகை மலர்’ வெளிவந்தது.

## கனடியத் தமிழர் பேரவை - ரொறன்ரோ ‘தமிழர் தெருவிழா 2019’





ரொறன்ரோ மாநகரில் ஆகஸ்ட் 24, 25 ஆம் திகதிகளில், மார்க்கம் சாலையில் நடைபெற்ற கனடியத் தமிழர் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழர் தெரு விழாவில் 250,000 பேருக்கும் மேலானோர் கலந்து கொண்டனர். ரொறன்ரோ நகரபிதா ஜோன் ரோறி மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைத்தார். மயிலாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம், பிறநாட்டவர் நிகழ்ச்சிகள் எனப் பல கலைஞர்களின் கலைவடிவங்களும் இடம்பெற்றிருந்தன. மினசோட்டாவின், ‘தமிழர் 2500 வருட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களின் தொகுப்பு கண்காட்சியும்’, FeTNAவினால் வடிவமைக்கப் பட்ட கீழடி அகழ்வாராட்சி கண்காட்சியும், ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை திட்டத்திற்கு ஆதரவு திரட்டும் கலை ஊர்வலமும் தமிழ் ஆர்வலர்களைப் பரவசப் படுத்தியது.

5. சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாக விளங்கிய நூல் எது?

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) இரண்டும் ஈ) இரண்டுமில்லை



## மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம்

ஜூலை 13 அன்று "எண்ணங்களின் நாள்" என்று அழைக்கப்பட்டு, உலகளவில் புகழ் பெற்ற மருத்துவர், எழுத்தாளர், சமூக சேவகர், கலைத்துறை முன்னோடிகள், தொழில் அதிபர்களை அழைத்துச் சிறப்பித்து அவர்களின் அனுபவங்களைக் கேட்டுப் பயனடைந்தோம். தமிழகத்திலிருந்து வந்த திரை மற்றும் இசைத்துறை வல்லுநர்கள் சேர்ந்து நடத்திய "நட்சத்திர இரவு" நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது. "MTS RADIO" நிலைய இணைப்பில், 25 குடும்பங்கள் தொலைபேசியில் அழைத்து, அவர்களது அனுபவங்களையும் தங்களது தாய்க்கு நன்றிகளையும் உரித்தாக்கினர். அழைத்த அனைவருக்கும் $10 அமேசான் பரிசட்டை வழங்கப்பட்டது. ஜூலை 27 அன்று எழுத்தாளர் திரு. ஆழி செந்தில்நாதன் மற்றும் முனைவர் திரு. விஜய் அசோகன் அவர்களுடன் சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது.

## ரிச்மண்ட் தமிழ்ச்சங்கம்

நமது அடுத்த தலைமுறையினர் தான் ரிச்மண்ட் தமிழ்ச்சங்கத்தை எதிர்காலத்தில் வழி நடத்திச் செல்லப் போகிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு உயர்நிலைக் கல்வி மற்றும் கல்லூரி செல்லும் இளைஞர்களுக்காக "Impact-2019" என்ற நிகழ்ச்சியை கடந்த ஆகஸ்ட் மாதம் 10-ஆம் தேதி தமிழ்ச்சங்கம் நடத்தியது.

இதில் இளைஞர்கள் தமிழ்ச்சங்க நிகழ்வுகள் (தமிழ்ப் பள்ளி, கோடை முகாம், கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள்) மூலமாகப் பெற்ற தங்களது அனுபவம் மற்றும் இனிய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் இளைஞர்கள் தங்கள் கல்லூரி வாழ்க்கை, கல்லூரி சேர்வதற்கான வழிமுறைகள் பற்றி ஆவலுடன் கேட்டு அறிந்து கொண்டனர்.







## மத்திய இல்லினாய் தமிழ்ச்சங்கம்

உலகத்தமிழ் மாநாடு மற்றும் அமெரிக்கத் தமிழர்களின் ஒருங்கிணைந்த விழாவிற்கு வருகை தந்த பல கலைஞர்களுடன் மத்திய இல்லினாய் தமிழ்ச்சங்கத்திலிருந்து கலந்துகொண்ட பல அங்கத்தினர் உரையாடி, கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இறுதியில் உலக அமைதிக்காக அரங்கில் அனைவரும் சபதமெடுத்துக்கொண்டது, தமிழ்ச் சமுதாயம், 'தம்போலவே பிறரும் அன்போடும், அருளோடும், அறிவோடும் வாழவேண்டும்' என்ற கருத்தை மையமாக வைத்து புலவர் குழந்தை எழுதிய "அன்பாகி யருளாகி யறிவாகி யுலகுயிரின், முன்பாகி யொளியாகி முதலாகி முடியாத, இன்பாகி யியல்கின்ற இறைவாழ்த்தி முறைவாழ்ந்தார், தன்போல்ப் பிறவாழ்வு தனைப்பேணும் பழந்தமிழர்" என்ற வரிகளை நினைவூட்டியது.

6. ஏலம், இலவங்கம், நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய மூலப் பொருள்களைக் கொண்ட மருந்து எது?

அ) திரிகடுகம் ஆ) சிறுபஞ்சமூலம் இ) ஏலாதி ஈ) அனைத்தும்

## கேன்சஸ் தமிழ்ச்சங்கம்

எங்கள் சங்கத்தின் இவ்வாண்டு கோடை மகிழ்வுலா, 24 ஆகஸ்டு 19 ஆம் நாளில், ஹெரிடேஜ் பூங்காவில் இனிதே நடைபெற்றது. தமிழ்நாட்டு வட்டார உணவு வகைகளை, சங்கத்தின் உறுப்பினர்களே சமைத்து விற்பனை செய்தனர். இனிப்பு போளி, இடியாப்பம், பழச்சாறு, செட்டிநாட்டுத் தவலை வடை, குழிப் பணியாரம் மற்றும் பலவகையான சுவையான உணவு பண்டங்கள் அனைவரையும் மிகவும் கவர்ந்தன. சிறார் மற்றும் பெரியவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.







## இலங்கை தமிழ்ச்சங்கம் - நியூ யார்க்

இலங்கை தமிழ்ச்சங்கம் - ஸ்டாடன் ஐலாந்து தமிழ்ப் பாடசாலையின் ஐந்தாம் ஆண்டு தந்தையர் தின கோடை கால விழா, ஆனி மாதம் 16 ஆம் நாள், மில்லர் பீல்ட் (Miller Field) ஸ்டாடன் ஐலாந்து பூங்காவில் சிறப்பாக நடை பெற்றது. பாடசாலை மாணவர்கள், சிறுவர் விளையாட்டுகளில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். வழமை போல் இந்த முறையும் பல வகையான சுவைமிக்க உணவு வகைகள் பரிமாறப்பட்டன. மேலும், முதன் முறையாக அப்பூங்காவில் தமிழரின் உணவான தோசையும், ஈழத்திலும் இந்தியாவிலும் புகழ் பெற்ற சாலையோர உணவான கொத்து ரொட்டியும் அங்கேயே தயாரிக்கப்பட்டு பரிமாறப்பட்டன.





## வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்

ஜூலை 14 அன்று நடந்த வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் முத்தமிழ் விழாவில் சிகாகோ பேரவை விழாவில் கலந்துகொண்ட பல தமிழறிஞர்கள், மற்றும் கலைஞர்கள் பங்கேற்றனர். ஆகஸ்டில் நடந்த இரண்டு இன்பச் சிற்றுலாக்களும் இப்பகுதிவாழ் தமிழ்க் குடும்பங்களுக்கு இன்பமூட்டும் நிகழ்வுகளாக அமைந்திருந்தன. ஹார்வார்டு பல்கலைகழகத் தமிழாசிரியர் திரு. ஜானதன் ரிப்லி அவர்களின் 'தமிழாசிரியர் பயிற்சிப் பட்டறை' தமிழ்ப் பள்ளிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. செப்டம்பர் 14 அன்று நடந்த இளையோர் திருவிழாவும் இளையோர் வழங்கிய மெல்லிசை நிகழ்ச்சியும் வந்திருந்த அனைவரையும் கவர்ந்தன. அண்மையில் நியூயார்க் வந்திருந்த தமிழக முதல்வர் தலைமையிலான சிறப்புக் கூட்டத்திலும் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கச் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

7. அமாவாசை அன்று வானத்தில் முழு நிலவு வரவேண்டி அபிராமி அந்தாதியை அபிராமபட்டர் பாடியது எந்த மன்னனுக்காக?

அ) இராசேந்திர சோழன் ஆ) இரண்டாம் சாளுக்கியன் இ) இரண்டாம் சரபோசி ஈ) சேரன் செங்குட்டுவன்

## தென் மத்திய தமிழ்ச்சங்கம், மெம்ஃபிஸ்



செப்டம்பர் 8 ஆம் தேதியன்று இந்தியக் கலாச்சார மையம் மற்றும் கோயில் சார்பாக நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழாவில், தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினர்கள் பரதநாட்டியம், கரகாட்டம், மற்றும் கும்மியாட்டம் என தமிழ்ப் பண்பாட்டுக் கலைகளை வழங்கிச் சிறப்பித்தனர். தமிழ்ப்பள்ளியின் ஆண்டுவிழாவின்போது, பள்ளியில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பதிப்பாசிரியர் திரு. சீனிவாசன் முத்துசாமி அவர்களின் தன்னிகரற்ற உழைப்பில் "தளிர்" எனும் பெயரில் பள்ளிக்கான சிறப்பு வருடாந்திர செய்தி மடல் வெளியிடப்பட்டது.




## மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கம்

ஜூலை 21 ஆம் நாளில், மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கத்தின் கோடைக் கொண்டாட்டம் கோலாகலமாக பூங்காவொன்றில் கொண்டாடப்பட்டது. அதில் சிறுவர் சிறுமிகளுக்குப் போட்டிகள் பல வைக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழகத்திலிருந்து வந்திருந்த தாத்தா பாட்டிகளுக்கு சிறப்புப் போட்டிகள் நடத்தப்பட்டு, வென்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர். ஆகஸ்ட் 10 ஆம் நாளில் ஆடவர் மற்றும் மகளிருக்கான கைப்பந்துப் போட்டி நடத்தி, அதில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கோப்பைகளும், சிறந்த போட்டியாளர் விருதும் வழங்கப்பட்டன.





## நியூ இங்கிலாந்து தமிழ்ச்சங்கம்

நியூ இங்கிலாந்து தமிழ்ச்சங்கத்தின் கோடை விழா, கடந்த ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாளில், ஆப்கின்டன் மாநிலப் பூங்காவில் சிறப்பாக நடைபெற்றது. இதில், கம்பங்கூழ், கேப்பங்கூழ் தயாரிக்கப்பட்டுப் பரிமாறப்பட்டன. மேலும் தோசை அங்கேயே செய்யப்பட்டு சூடாக வழங்கப்பட்டது. சுதந்திர தினத்தையொட்டி குழந்தைகள் இசைக்கருவிகளை வாசித்து அணிவகுப்பு செய்தது மேலும் சிறப்பாக இருந்தது. விருந்தினர்கள் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றனர். தமிழ்ச்சங்க உறுப்பினர்களும், உறவுகளும், நண்பர்களும் இவ்விழாவில் பங்கேற்று மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர்.

8. நண்பி தென்று தீய சொல்லார்; முன்பு நின்று முனிவு செய்யார்; அன்பு வேண்டு பவர் – இந்த யாப்பெருங்கலக்காரிகைப் பாடல் எந்த வெண்பா இனத்தைச் சேர்ந்தது?

அ) குறள்வெண் செந்துறை ஆ) குறட்டாழிசை இ) வெண்டாழிசை ஈ) வெண்டுறை





## கனெக்டிகட் தமிழ்ச்சங்கம்

கனெக்டிகட் தமிழ்ச்சங்கத்தின் கோடைக் குடும்ப விழாவை, ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாளில், அனைவரும் இணைந்து மகிழ்ச்சியாகக் கொண்டாடினோம். இம்முறையும் பூங்காவிலேயே சமைத்தோம்! சொல்லின் செல்வி திருமதி. உமையாள் முத்து அவர்கள் “காவியத்தாயின் இளைய மகன் கண்ணதாசன்” என்ற தலைப்பில் ஆற்றிய இலக்கியப் பேருரை, இன்னிசை நிகழ்ச்சி எனக் கோலாகலமாகக் கோடை விழா களைகட்டியது. சங்க உறுப்பினர்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.






## தமிழ் மக்கள் மன்றம் – நியூ ஹாம்ப்ஷயர்

தமிழ் மக்கள் மன்றத்தின் கோடைக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, கடந்த ஜூன் 22 ஆம் நாளில், 17 அணிகளுக்கிடையேயான கைப்பந்துப் போட்டிகளும் மற்றும் 7 அணிகள் கலந்துகொண்ட எறிபந்து போட்டிகளும், பாக்ஸ்பரோ மைதானத்தில் நடைபெற்றன. கனெக்டிகட் மாகாணத்தின் பாக்யா தேவேந்திரன் தலைமையிலான எறிபந்து அணி வெற்றி பெற்றது. கைப்பந்து போட்டியில், கனெக்டிகட் சாரியட்ஸ் அணி இவ்வாண்டும் வெற்றி வாகை சூடியது. நாள் முழுவதும் நடைபெற்ற 60 போட்டிகளையும் நியூ இங்கிலாந்து மக்கள் கண்டு களித்ததும் வீரர்களை உற்சாகப்படுத்தியதும் காண்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

## அயோவா தமிழ்ச்சங்கம்

அயோவா தமிழ்ச்சங்கம் சார்பாக, பேரவையின் 32 ஆம் தமிழ் விழாவில், கதம்ப நடனம், தமிழர் சந்தை ஆகியவற்றை நடத்தியதோடு சங்கங்களின் சங்கமம் நிகழ்வில் 50 சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆகஸ்ட் 31 ஆம் நாள் நடந்த சங்கத்தின் கோடைச் சுற்றுலாவில் 25 குடும்பங்கள் பங்கெடுத்ததோடு, விளையாட்டுகளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆரவாரத்துடன் கலந்து மகிழ்ந்தனர். 5 ஆம் வகுப்பு வரையுள்ள அயோவா தமிழ்ப் பள்ளியில் ‘முன் மழலை நிலை’ இவ்வருடம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. 85 குழந்தைகள் கொண்ட வெஸ்ட் டெ மாயின்ஸ், சிடார் ராபிட்ஸ் பள்ளிகளில் 20 ஆசிரியர்கள், 15 உதவிக் குழுவினர் செயலாற்றுகின்றனர்.






9. எண்ணம் வந்தால் தோற்று முடம்பில்; உடம்பின் மிகத்தோற்றும் முகத்து; முகத்தின் மிகத்தோற்றும் கண்ணில் – என்ற உள்ளத்து உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கோட்பாட்டினைக் கொண்ட கலை எது?

அ) நாட்டியம் ஆ) பாடல் இ) நடிப்பு ஈ) ஏதுமில்லை






## வளைகுடாப் பகுதித் தமிழ் மன்றம் – சான் பிரான்சிஸ்கோ

வளைகுடாப் பகுதித் தமிழ் மன்றம், தென் கரோலினா மருத்துவப் பல்கலைக் கழகத்தில் திருமூலர் தமிழ் இருக்கை தொடர்பாக மூச்சுப் பயிற்சிப் பயிலரங்கங்களை நடத்திவரும் ஆராய்ச்சியாளர் திரு. சுந்தர் பாலசுப்ரமணியன் அவர்களுடன் இணைந்து, ஜூன் 8 ஆம் நாளன்று மூச்சுப் பயிற்சிப் பயிலரங்கத்தை நடத்தியது. ஆகஸ்ட் 10 ஆம் தேதியன்று திரு. பழனியப்பன் அவர்களுடன் சேர்ந்து ‘தமிழர் பண்பாட்டு வரலாறு – ஒரு புதிய கண்ணோட்டம்’ என்ற நிகழ்ச்சியை நடத்தியது. ஆகஸ்ட் 24 ஆம் தேதியன்று, கைப்பந்து மற்றும் ஏறி பந்து போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.



## கொலம்பஸ் தமிழ்ச்சங்கம்

கொலம்பஸ் தமிழ்ச்சங்கம் இவ்வாண்டு நடத்திய கோடை விழாவில் சங்க உறுப்பினர்கள் பாரம்பரிய உணவு வகைகளை ஆர்வத்தோடு சமைத்து வந்து பகிர்ந்துண்டனர். சிறுவர்கள் விரும்பும் பனிக்கூம்பு, பனிக்குழைவு, பழக்கலவைகளும் செய்து வழங்கப்பட்டன. முதன் முறையாக நடத்தப்பட்ட நேரடி பிரியாணி சமைக்கும் போட்டியில் மிகுந்த ஆர்வத்துடன் பலர் பங்கேற்றனர். குழந்தைகளுக்கான மிதிவண்டி ஊர்வலம், இசைநாற்காலி போன்ற போட்டிகள் ஆரவாரத்துடன் நடைபெற்றன. மேலும் கைப்பந்து, எறிபந்து, கிரிக்கெட் என குழு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.




## போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றம்







போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றம், ஆகஸ்ட் 17 ஆம் நாளன்று கோலாகலமாகக் கொண்டாடிய 19 ஆவது வேனில் விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பத்தினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மகளிர் மற்றும் சிறார்கள் ஸூம்பா நடனமாடி மகிழ்ந்தனர். தமிழரின் வீர விளையாட்டாம் சிலம்பாட்டம் அனைவருக்கும் கற்றுத் தரப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் கோடை வெயில் மறக்க, இளநீர் பாயசம் மற்றும் பாலூடா பரிமாறப்பட்டது. மறுசுழற்சி பொருட்களைக் கொண்ட அலங்காரம் மற்றும் நேரடித் தோசைப் பந்தல் விழாவின் சிறப்பு ஏற்பாடாக அனைவராலும் பாராட்டப்பட்டது.

10. ‘வண்ணப்பாட்டு’ என்ற பெண்கள் பாடும் பாடல் எதனோடு தொடர்புடையது?

அ) உரலில் நெல்லை குத்துதல் ஆ) கும்மி அடித்தல் இ) நாட்டியம் ஆடல் ஈ) தினைப்புனம் காத்தல்



## தமிழ் சிநேகம் – தாம்பா, ப்ளோரிடா

ஆகஸ்ட் மாதம் 23 ஆம் நாள் மாலை, தமிழ் சிநேகம் நடத்தும் 'சிநேகம் தமிழ் பாடசாலை' தனது மூன்றாம் ஆண்டு கல்வியாண்டை, 90 மாணவ, மாணவியர்களுடன் வெற்றிகரமாகத் தொடங்கியது. ஆகஸ்ட் மாதம் 24 ஆம் நாளில் 'தமிழ் சிநேகம்' மடிரா கடற்கரையில் கொண்டாடிய 'நிலாச் சோறு' நிகழ்வில் 160–க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு சிற்றுண்டி உண்டு, கடலில் நீராடி, மணலில் விளையாடி, கூடி அமர்ந்து, பேசி, சிரித்து, கேளிக்கை விளையாட்டுகளில் பங்குபெற்று, இரவு உணவு உண்டு ஆனந்தத்துடன் விடைபெற்றுச் சென்றனர்.

## தென்பூவகத் தமிழ்ச்சங்கம்

தென்பூவகத் தமிழ்ச்சங்கம் ஜூன் 8 ஆம் நாளன்று "செல்வ மேலாண்மை-உருவாக்கம், சொத்துப் பாதுகாப்பு, வரி குறைப்பு உத்திகள்" என்ற நிகழ்ச்சியை நடத்தியது. திருவாளர்கள் சாரி மற்றும் சாரி மிக அருமையாக, செல்வத்தைச் சேமிக்க உதவும் முக்கியக் கோட்பாடுகளை விளக்கினார்கள். ஆகஸ்ட் 24 ஆம் நாளில் "ஆரோக்கியம் உங்கள் கையில் – அக்கு பிரஷர் மற்றும் இயற்கை வைத்தியம்" என்ற நிகழ்ச்சியை நடத்தியது. பேராசிரியர் ரவீந்திரன் அவர்கள் மிக அருமையாக, மிக எளிமையாக, விவரமாகப் பல நுட்பங்களையும், பயிற்சி முறைகளையும் விஞ்ஞான ரீதியாக எடுத்துரைத்தார். சில கடுமையான நாள்பட்ட நோய்களுக்கு நடைமுறைப் பயிற்சி அளித்து, தீவிரத்தைக் குறைத்துக் காண்பித்தார்.





## ஹாரிஸ்பர்க் வட்டாரத் தமிழ்ச்சங்கம்

இந்த ஆண்டு கோடை நாட்களை புத்துணர்வூட்டிப் பயன்படும் விதமாகக் கொண்டாடுவதற்காக ஹாரிஸ்பர்க் வட்டார தமிழ்ச்சங்கம் 'ஜூன் மாதத்தில், 26 குழுவினர்கள் கலந்து கொண்ட கைப்பந்து மற்றும் வலைப்பந்து போட்டிகள்', 'ஆகஸ்ட் மாதத்தில் காவடி, கரகாட்டம், சிலம்பாட்டம், பரதநாட்டியம் போன்ற கலைகள் அடங்கிய இந்திய நாள் ஊர்வலம் நிகழ்ச்சி', 'கோடை மகிழ்வுலா' போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தனர். ரோபாட்டிக் திறனில் ஆர்வத்தினை ஊக்குவிப்பதற்காக இளைஞர் அணி உதவியுடன் சுமார் 6 புதுக் குழுக்கள் அமைந்தன. சமூகப் பணிகளாக, மத்திய பென்சில்வேனியா உணவு மையத்தில் பிள்ளைகளும் பெற்றோரும் உதவியோடு சாலையோரத் தூய்மைப் பணிகளையும் செய்தனர்.

11. நாக்கின் நுனி மேல் எழுந்து உள் நோக்கி வளைந்து பின் வேகமாகக் கீழே வரும் போது அண்ணத்தில் மோதுவதால் எழுகிற ஒலி எது?

அ) வருடொலி ஆ) குரல் உடை ஒலி இ) உரசொலி ஈ) வெடிப்பொலி

# மினசோட்டாத் தமிழ்ச்சங்கம்

மினசோட்டாத் தமிழ்ச்சங்கத்தின் 11 ஆம் ஆண்டு முத்தமிழ் விழாவில் கலைமாமணி திரு.சீர்காழி சிவசிதம்பரம் தனது கணீர் குரலில் பாடி அனைவரையும் மெய் மறக்க வைத்தார். மினசோட்டாத் தமிழ்ச்சங்கம் மற்றும் பள்ளியால் அறிமுகம் செய்யப்பட்ட கல்விக்கான உதவித்தொகையை தமிழ்ப்பள்ளியில் இதுவரை இருமொழி முத்திரை (Bilingual seal) பெற்ற பன்னிரண்டு மாணவர்களில் ஐந்து மாணவர்கள் பெற்றனர். இவ்வாண்டு தமிழகத்திலிருந்து அழைத்து வரப்பட்ட தவில், பறை, நாயனம், முகவீணை, கிராமிய நடனம், பம்பை, உருமி கலைஞர்களிடம் பயிற்சியெடுத்தவர்கள் ஒயிலாட்டம், கைச்சிலம்பாட்டம், படுகர் ஆட்டம், கம்பத்தாட்டம், களியலாட்டம், கும்மியாட்டம் போன்ற இதுவரை நாம் நேரில் பார்த்திராத பல தமிழர் ஆட்டங்களை மேடையேற்றினர்.








# மாநகர மில்வாக்கி தமிழ்ச்சங்கம்

மாநகர மில்வாக்கி தமிழ்ச்சங்கம், 10 ஆவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் குழுவுடன் இணைந்து பல்வேறு களப்பணிகளை செவ்வனே செய்து முடித்தார்கள், சங்கங்களின் சங்கமம் நிகழ்ச்சியில் மில்வாக்கி மக்கள் முளைப்பாரியுடன் ஊர்வலம் வந்த காட்சியைக் கண்டவர் அனைவரும் திருவிழாவிற்கு வந்த உணர்வைப் பெற்றனர். மேலும் பல போட்டிகளில் நமது சங்கத்தினர் பரிசில்களையும், பாராட்டையும் பெற்றனர். சித்த மருத்துவம் மற்றும் தமிழர் வாழ்வியல் பற்றி ஜூலை 8 ஆம் நாளில், மருத்துவர் சிவராமன் அவர்கள் மில்வாக்கி வந்து ஆற்றிய உரை மில்வாக்கி தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்கு மிக்கப் பயனுள்ளதாக அமைந்தது.






# டுவின் சிட்டீஸ் தமிழ் மன்றம்

கடந்த ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாளில் டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேஷன் சார்பில் பிளாக்ஹாக் ஈகன் பூங்காவில் குடும்பச் சுற்றுலா நடத்தப்பட்டது. பின்னர், சாக்குப் பை ஓட்டப் பந்தயம் உட்பட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு அவற்றில் வென்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் பரிசு அட்டைகள் வழங்கப்பட்டன. கடந்த ஆகஸ்ட் 10 ஆம் நாளில் ஐ.ஏ.எம் அமைப்பு சார்பில் நடந்த இந்திய சுதந்திர தின விழாவை முன்னிட்டு நடந்த 'இந்திய ஃபெஸ்ட் 'நிகழ்ச்சியில், டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேஷன் உறுப்பினர்கள் பங்குகொண்டுச் சிறப்பித்தனர்.

12. அமைதியாய் இருந்தால் இருப்பான்; சினம் கொண்டு சீறினால் அழித்து விடுவான் - இந்த அதியமானின் அமைதியான பண்புக்கு ஔவையார் காட்டும் உவமை எது?

அ) செங்கோல் ஆ) தீக்கடைக்கோல் இ) சாட்டைக் கோல் ஈ) அனைத்தும்

# உலகத் தமிழ் தொழில் முனைவோர் மாநாடு (GTEN)

## Global Tamil Entrepreneurs Network (GTEN)

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் அமெரிக்கத் தமிழ் தொழில் முனைவோர் சங்கமும் (ATEA) ஜூலை 6 மற்றும் 7 ஆம் தேதிகளில் சிகாகோவில் நடத்திய "உலகத் தமிழ் தொழில் முனைவோர் மாநாடு" (GTEN) தமிழ் தொழில் முனைவோர் பயண வரலாற்றில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தது. 10 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் 32 ஆவது ஆண்டு மாநாடு மற்றும் சிகாகோ தமிழ்ச்சங்கத்தின் பொன்விழாக் கொண்டாட்டம் ஆகியவற்றின் முக்கிய நிகழ்வுகளின் ஒரு பகுதியாகப் இந்தப் பயனுள்ள அமர்வு நடந்தது.

உலகெங்கிலும் உள்ள தமிழ் தொழில் முனைவோரை ஒருங்கிணைத்து, இரண்டாம் தலைமுறையினரை ஈர்க்கவும், பங்கேற்க ஒரு வாய்ப்பையும் மதிப்பையும் வழங்குவதே இம்மாநாட்டின் முதன்மை குறிக்கோளாக இருந்தது. மேலும், வணிகப் போட்டிகளிலும் தொடக்க சவால்களிலும் பங்கேற்க இரண்டாம் தலைமுறையினரை உற்சாகப்படுத்தியுள்ளது. பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் கருத்துக்களின் தாக்கத்தின் அடிப்படையில் விருது வழங்கப்பட்டது. 1000-க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், 25-க்கும் மேற்பட்ட தலைப்புகள், 12-க்கும் மேற்பட்ட அமர்வுகள் மற்றும் 60-க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் பங்கேற்றனர். உலக அரசு அதிகாரிகள் உட்பட "உலகெங்கிலும் உள்ள அனைத்து பதிவாளர்களின்" என்றிருப்பதை "பன்னாட்டுப் பதிவாளர்களின்" இதயங்களையும் இம்மாநாடு வென்றுள்ளது.

புகழ்பெற்ற பேராசிரியர் டாக்டர் பாலா வி.பாலசந்திரனின் அற்புதமான சிறப்புரையுடன் நிகழ்வு தொடங்கியது. முக்கிய உரையின் பின்னர் நடைபெற்ற முதல் குழு விவாதத்தின் போது, டாக்டர் பாலா வி.பாலசந்திரன், டாக்டர் ஜி. விஸ்வநாதன் மற்றும் டாக்டர் பாலன் ஆகியோர் உலகளாவிய கல்வி மற்றும் மனித மூலதன மேம்பாடு குறித்து விவாதித்தனர். அடுத்த அமர்வு மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டெஸ்லாவின் (TESLA) முன்னாள் சி.ஐ.ஓ (CIO) திரு. ஜெய் விஜயனுடன் ஒரு ஆரோக்கியமான கலந்துரையாடல் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது. நடுவரும், பார்வையாளரும் கேட்ட கேள்விகளால் இந்த அமர்வு சுவையார்வமுள்ளதாக இருந்தது.

இரண்டாவது குழு விவாதத்தில், தமிழ் வணிக முன்னோடிகள் திரு. ராம் துக்காராம், திரு. பால் பாண்டியன் மற்றும் திரு. பாலகன் ஆறுமுகசாமி ஆகியோர் வணிகத்தில் மூலதன வாய்ப்பு குறித்த தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மூன்றாவது குழு விவாதத்தில் திருமதி.லதா பாண்டியராஜன், திருமதி. வீணா குமாரவேல், திருமதி. காஞ்சனா ராமன் மற்றும் செல்வி.சுமி



13. திருமூலர் திருக்கயிலையில் வாழ்ந்த சிவயோகியார். அவர் தமிழகத்திற்கு வந்த நோக்கம் யாது?

அ) திருத்தலங்களைத் தரிசிக்க ஆ) அகத்தியரைச் சந்திக்க இ) திருமந்திரம் இயற்ற ஈ) தெய்வச் சேக்கிழாரைச் சந்திக்க

ஷான் ஆகியோர் வணிகத்தில் பெண்களின் முக்கியத்துவத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

திரு. பத்மசிங் ஐசக், திரு.மணி கிருஷ்ணன், திரு.ராஜ்குமார் ராமசாமி மற்றும் டாக்டர் சி பழனிவேலு ஆகியோர் எல்லைகள் இல்லாமல் எதிர்கால வர்த்தகம் குறித்த தங்கள் நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டனர். குடியேற்றம் தொடர்பாக தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் இந்த நேரத்தில், குடிவரவு வக்கீல்கள் திருமதி. கவிதா ராமசாமி, திருமதி சாரதா சங்கரராமன், திருமதி மேரி கென்னடி மற்றும் திரு. சந்தீப் அதிபதி ஆகியோர் அமெரிக்காவின் குடியேற்றத்தில் உள்ள கொள்கை மாற்றங்கள் குறித்து தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். திரு பிரேம் அபூர்வசாமி, திரு சுப்ரமணியன் முனிசாமி மற்றும் டாக்டர் நசீரா தாவூத் ஆகியோர் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் வேலைவாய்ப்பு மற்றும் வணிக வாய்ப்புகளைச் சித்தரித்தனர். 'கிளைகள் ஏற்று நடத்தும் தொழில் (Franchise industry) முன்பை விட இன்னும் வலுவாகவும் போட்டித்தன்மையுடனும் உள்ளது. நேச்சுரல் சலூன்(Natural saloon) உரிமையாளர் திரு. சி.கே.குமாரவேல், பெஸ்ட் பிரையின்ஸ் லேர்னிங் (Best Brains Learning Centers) தலைமை நிர்வாக அதிகாரி திரு.அஜய் சுங்கரா மற்றும் ஆரோக்கிய சித்தா சுகாதார தயாரிப்புகளின் நிறுவனர் டாக்டர் ஜி.சிவராமன் ஆகியோர் கூட்டாண்மைக்கான உத்திகளை வழங்கினர்.

தொழில்நுட்பமும் மனித வாழ்க்கையும் பிரிக்க முடியாதவை, மேலும் சமூகம் தொழில்நுட்பத்தை சார்ந்துள்ளது. திரு.ஸ்ரீதர் தேவசிகாமணி, திரு.ஸ்ரீனிவாசன் சுந்தரம், திரு.பிரசாந்த் ராமகிருஷ்ணன் மற்றும் டாக்டர் ராஜ் பழனியப்பன் ஆகியோர் சமூகத்தில் தொழில்நுட்பத்தின் நேர்மறையான தாக்கங்கள் குறித்து தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர். திரு. ராஜ் கிருஷ்ணன், திரு.சிவா நடராஜா, திரு.ரெங்கசாமி காசிநாதன் மற்றும் டாக்டர் ராஜ் ரமேஷ் ஆகியோர் தொழில்நுட்பத்தில் பெரிய மாற்றம் (AI, Blockchain, IoT, ML) பற்றி விவாதித்தனர். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழ் வர்த்தக சபைகளின் பிரதிநிதிகளுடன் ஒன்றிணைந்து கலந்துரையாட பார்வையாளர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

இந்த மாநாட்டிலிருந்து சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாவன: தமிழக அரசு மற்றும் தமிழக கலாச்சார அமைச்சர் மாண்புமிகு அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன், தமிழ்நாட்டில் பல்வேறு முதலீட்டு வாய்ப்புகளை வழங்கினார். மதுரை எம்.பி. திரு. சு வெங்கடேசன், இந்த நிகழ்வு மக்கள் மீது ஏற்படுத்திய தாக்கத்தால் மிகவும் வியப்படைந்தார், அவர் மதுரையில் ஒரு முதலீட்டாளர் சந்திப்பை ஏற்பாடு செய்து மக்களிடையே உறவை வலுப்படுத்த விரும்பினார். கனடாவின் குடிவரவு அதிகாரிகள் நமது குழுவுடன் இணைந்து கனடாவில் தொழில்நுட்ப திறமைகளை வளர்க்கவும், திறமையான மக்களை வரவழைப்பதற்கும் தமது ஆர்வத்தை காட்டினர். மொரீஷியஸ் நாட்டின் ஜனாதிபதி மாண்புமிகு திரு. பரமசிவம் பிள்ளை வையாபுரி, அவரது இறுதிச் சிறப்பின் போது, அதிக முதலீட்டாளர்களை தனது நாட்டிற்கு கொண்டுவருவதில் மற்றும் இருதரப்பு உறவில் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். சுற்றுலாத் துறையில் முதலீடு செய்வதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

நீங்கள் சமூக மீடியாவைப் பயன்படுத்தவில்லை எனில், உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதியை அடைய விரைவான, மலிவான மற்றும் பயனுள்ள வழியை நீங்கள் இழக்கிறீர்கள். சமூக இணைய ஊடகங்கள் இல்லாமல் வணிகங்கள் ஏன் வாழ முடியாது என்று GTEN இன் ஊடக பங்காளிகள் திரு. பார்த்தசாரதி சம்பந்தம் (Valaitamil.com) மற்றும் திரு. மகேஷ் நாட்டாமை (Tamarica TV) விளக்கினர்.

ஒட்டுமொத்தமாக, உலகெங்கிலும் உள்ள தமிழ் வணிக சமூகத்தை உலகத் தமிழ் சாதனையாளர்களுடனும், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடனும் நெருக்கமாக இணைப்பதில் GTEN வெற்றிகரமாக இந்த பணியை அடைய முடிந்தது. நாள் முழுவதும் நடந்த அனைத்து நிகழ்வுகளின் தன்னார்வத் தொண்டர்களும் அமைப்பாளர்களால் பாராட்டப்பட்டனர். பெற்றோர்களும் இளைஞர்களும் பல்வேறு போட்டிகளில் ஈடுபட்டனர் மற்றும் பேச்சுகளால் ஈர்க்கப்பட்டனர். இது போன்ற எதிர்கால நிகழ்வுகளுக்கு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். நன்கொடையாளர்கள் ஆதரவு இல்லாமல் எந்த நிகழ்வும் இயங்க முடியாது. நிகழ்வு அமைப்பாளர்கள் நன்கொடையாளர்களை மனதார பாராட்டினர்

இந்த GTEN நிகழ்வு நிச்சயமாக தமிழ் தொழில்முனைவோரின் ஈடுபாட்டை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான ஒரு துவக்கப் பாதையாகும்.




14. ஒரு மாத்திரை என்பது எந்த நேர அளவைக் குறிக்கும்?

அ) இயல்பாகக் கண் இமைப்பது ஆ) கை நொடிப்பது இ) ஒரு நாழிகை ஈ) அ அல்லது ஆ



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் அட்லாண்டா மாநகர தமிழ்ச்சங்கமும்

இணைந்து நடத்தவிருக்கும்

Federation of Tamil Sangams of North America
and
Greater Atlanta Tamil Sangam
Jointly Hosting

பேரவையின் 33-வது தமிழ்விழா 2020

33rd FeTNA TAMIL CONVENTION 2020

Date & Place:

During the First Week of July 2020
at Atlanta, GA
(Exact dates and venue will be announced soon)

அனைவரும் வருக! ஆதரவு தருக!

Sundar Kuppuswamy
President, FeTNA

Greater Atlanta Tamil Sangam

www.fetna.org
https://gatamilsangam.org


# நியூ யார்க் ஸ்டோனி புரூக்

## பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை



பேரவை உறுப்பினரும், தாளாளருமான திரு பாலா சுவாமிநாதனும் அவரின் இணையர் திருமதி பிரபா பாலாவும் ஸ்டோனி புரூக் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க உள்ளனர். திரு பாலா அவர்கள் தமிழ் மொழி மீது கொண்ட ஆழமான பற்றின் காரணமாக தாயார் ஆனந்தவல்லி மற்றும் தந்தையார் டாக்டர். சுவாமிநாதன் அவர்களின் பெயரில் இந்த தமிழ் இருக்கையை அமைக்கிறார். இந்த முயற்சியினைப் பற்றி திரு பாலா பகிர்ந்துள்ள விவரங்களை இந்த ஆவணத்தில் காணலாம்:

https://docs.google.com document/d/1FCeLyRDaKQtTZVxDsbGc4Aeuw9N6coGqzXSVuax8Y4/edit?usp=sharing

இந்த இருக்கை பற்றிய விவரங்களை ஸ்டோனி புரூக் பல்கலைக் கழகத்தின் இணையதளத்திலும் காணலாம்: https://news.stonybrook.edu/alumni/new-professorship-to-study-one-of-the-worlds-oldest-languages/ (official SBU)

திரு. பாலா குடும்பத்தினரின் இந்த மகத்தான தமிழ்ப்பணிக்கு, பேரவை தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

15. அமாவாசை அன்று வானத்தில் முழு நிலவு வரவேண்டி அபிராமி அந்தாதியை அபிராமபட்டர் பாடியது எந்த மன்னனுக்காக?

அ) இராசேந்திர சோழன் ஆ) இரண்டாம் சாளுக்கியன் இ) இரண்டாம் சரபோசி ஈ) சேரன் செங்குட்டுவன்

# 2019 பேரவை விழா மலரில் விடுபட்ட விளம்பரங்கள் மற்றும் கொடையாளர் விவரம்



வணிகப் பெருங்கொடை வள்ளல்

டாக்டர். ஷோபா

வள்ளல்



அண்ணாமலை முத்துக்கருப்பன், கவிதா அண்ணாமலை

பெருங்கொடைவள்ளல்



முனைவர். தணி குமார் சேரன் குடும்பத்தினர்



**விடைகள்** 1 - இ; 2 - அ; 3 - இ; 4 - ஈ; 5 - ஆ; 6 - இ; 7 - இ; 8 - இ; 9 - இ; 10 - அ; 11 - அ; 12 - ஆ; 13 - ஆ; 14 - ஈ

**Sundar Kuppuswamy**
**President**
**Federation of Tamil Sangams of North America**
**3825 Grey Rock Drive**
**Ellicott City, MD 21042**

Best Compliments to 2nd International Conference
on Humanism and Self-Respect from Balagan Arumugaswamy CPA., LLM



Welcome to

# Balagan Business & Tax Service



Balagan Business & Tax Services can provide you with assistance in all your tax, financial, and business affairs - assistance that will improve your total financial well-being.



We want you to get the best financial and tax help possible. If you have a question which is not addressed here, please contact us via
e-mail: questions@balaganfinancials.com
or by phone:
(301) 931-1040/ (703) 723-9471




**Please visit our website for more information: www.balaganfinancials.com**

